# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.32/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.4 |
| Name | : | அன்பரசன் |
| Father's/Husband Name: | | சோமசுந்தரம் |
| Village | : | காடுவெட்டான் குறிச்சி கிராமம், |
| Taluk | : | உடையார் பாளையம் வட்டம், அரியலூர் மாவட்டம் |
| Age | : | 56/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 18.07.2024.

**(1969-ம் ஆண்டின் 54 வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. M.சிவரஞ்சனி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரிகள் A2-மகேந்திரன் ஆஜர் , A1-ரத்தினசாமி, A3-வெங்கடேஷ் ஆஜர் இல்லை. மனு செய்து கொள்ளப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். சென்னையில் நகர்புற உச்சவரம்பு ஆணையகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத 1ம் எதிரி கிருஷ்ண்மூர்த்தி மற்றும் 3ம் எதிரி வெங்கடேஷ் ஆகியோரையும் எனக்கு தெரியும். பார்த்தால் அடையாளம் காட்டுவேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் பசும்பலூர் பிர்கா வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வந்த 25.01.2021ம் தேதி வேலை நிமித்தமாக வேப்பந்தட்டை வட்டாட்சியர் அலவலகத்திற்கு மாலை 4 மணியளவில் வந்திருந்த போது இரண்டாவது தளத்தில் நான் வேலை நிமித்தமாக இருந்தபோது இவ்வழக்கின் எதிரிகள் 4 பேரும் வந்து எழுதிய பேப்பரில் உடனடியாக என்னை கையொப்பம் போட சொன்னார்கள். நான்

அதற்கு எந்த விண்ணப்பமாக இருந்தாலும் ஆன்லைனில் பதிவு செய்யுங்கள் நான் பரிசீலித்து தருகிறேன் என்று சொன்னேன். எதிரிகள் அனைவரும் மது அருந்தியிருந்தார்கள். நான் சொல்வதை கேட்காமல் என்னை தாக்கி என் கண் கண்ணாடி தட்டிவிட்டார்கள். அவர்கள் கொண்டுவந்த பேப்பரை என் மீது விசிறி எறிந்தார்கள். நான் சமாதானம் படுத்தியும் அவர்கள் சமாதானம் ஆகவில்லை. அதற்குள் அலுவலகத்தில் இருந்தவர்களுக்கும் எதிரிகளுக்கும் வாக்குவாதம் ஆகிவிட்டது.

(ii) எதிரிகள் மதுபோதையில் இருந்ததால் சொல்வதை கேளாமல் பிரச்சனை செய்ததால் வட்டாட்சியருக்கு தகவல் தெரிந்து அவர் மூலம் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டது. இது சம்மந்தமாக நான் எழுத்துபூர்வமாக புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்பட்ட ஆவணம் அவ்வாறு நான் கொடுத்த புகார் தான் (அது **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய போதுமான வாய்ப்பு அளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை இல்லை. சாட்சியம் முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC.32/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.5 |
| Name : | தேவராஜன் |
| Father's/Husband Name: | லட்சுமணன் |
| Village : | அரும்பாவூர் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 60/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 18.07.2024.

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. M.சிவரஞ்சனி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரிகள் A2–மகேந்திரன் ஆஜர் , A1–ரத்தினசாமி, A3–வெங்கடேஷ் ஆஜர் இல்லை. மனு செய்து கொள்ளப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் படிக்கவில்லை விவசாயம் செய்து வருகிறேன். கையொப்பம் மட்டும் போட தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். தேதி மாதம், ஆண்டு ஞாபகம் இல்லை. ஒருநாள் என் சொந்த வேலை விஷயமாக வேப்பந்தட்டை தாலுக்கா அலுவலகம் வந்திருந்தேன். அப்போது மாலை 3 மணியளவில் அரும்பாவூர் போலிசார் அங்கு வைத்து கையொப்பம் போட கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் கையொப்பம் போட்டேன். மற்ற விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது. பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் (அது **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலிசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) போலிசார் விசாரணயில் கடந்த 25.01.2021ம் தேதி மாலை 6 மணியளவில் நானும், எனது உறவினர் வீரபத்திரன் என்பவரும் வேப்பந்தட்டை வட்டாட்சியர் அலுவலகம் வந்த போது பசும்பலூர் RI–யை நான்கு நபர்கள் திட்டி பிரச்சனை செய்தது சம்மந்தமாக அரும்பாவூர் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்து பார்வை மகஜரில் எங்கள் இருவரிடமும் கையொப்பம் பெற்றார்கள் என்று சொல்லிவிட்டு தற்போது கையொப்பத்தை மட்டும் ஒப்புக்கொண்டு மற்ற விவரங்கள் தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

3(i) எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய போதுமான வாய்ப்பு அளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை இல்லை. சாட்சியம் முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT
VEPPANTHATTAI

| | |
|---|---|
| Calendar Case No: | CC.32/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.6 |
| Name : | வீரபத்திரன் |
| Father's/Husband Name: | கிருஷ்ணன் |
| Village : | அரும்பாவூர் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 38/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 18.07.2024.

**(1969-ம் ஆண்டின் 54 வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. M.சிவரஞ்சனி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரிகள் A2-மகேந்திரன் ஆஜர் , A1-ரத்தினசாமி, A3-வெங்கடேஷ் ஆஜர் இல்லை. மனு செய்து கொள்ளப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் டிப்ளமோ படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். தேதி, மாதம், ஆண்டு ஞாபகம் இல்லை. ஒருநாள் என் சொந்த வேலை விஷயமாக நானும், எனது உறவினர் தேவராஜீம் வேப்பந்தட்டை தாலுக்கா அலுவலகம் வந்திருந்தோம். அப்போது மாலை 3.30 மணிக்குமேல் அரும்பாவூர் போலிசார் அங்கு வைத்து கையொப்பம் போட கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் கையொப்பம் போட்டோம். சண்டை என்று மட்டும் சொன்னார்கள். மற்ற விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது. பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் (அது **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலிசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) போலிசார் விசாரணயில் கடந்த 25.01.2021ம் தேதி மாலை 6 மணியளவில் நானும், எனது உறவினர் தேவராஜ் என்பவரும் வேப்பந்தட்டை வட்டாட்சியர் அலுவலகம் வந்த போது பசும்பலூர் RI–யை நான்கு நபர்கள் திட்டி பிரச்சனை செய்தது சம்மந்தமாக அரும்பாவூர் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்து பார்வை மகஜரில் எங்கள் இருவரிடமும் கையொப்பம் பெற்றார்கள் என்று சொல்லிவிட்டு தற்போது கையொப்பத்தை மட்டும் ஒப்புக்கொண்டு மற்ற விவரங்கள் தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

3(i) எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய போதுமான வாய்ப்பு அளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை இல்லை. சாட்சியம் முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை